**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு M.சந்திரமோகன்., B.A.,B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 4–ம் நாள் புதன்கிழமை
*******

**இடைமனு எண்.5/2025 –ல் அசல் வழக்கு எண். 296/2017**

1. கலியன் (எ) கலியமூர்த்தி
2. ராஜாராம் ..... மனுதாரர்/ எதிர்வாதிகள்

...எதிராக...

நாகராஜன் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.04.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு B.ரெங்கராஜு அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

வழக்கில் தீர்ப்புரைக்காக போடப்பட்டுள்ள வாய்தாவினை Re–open செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/எதிர்வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் அசல் வழக்கில் 1–ம் எதிர்வாதி ஆவார். இவ்வழக்கு தீர்ப்புரைக்காக 12.03.2025 அன்று போடப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தங்களது வழக்கை நிரூபிக்க சில முக்கிய ஆதாரங்களைக் கொண்டுள்ளார்கள். மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் ஏற்கனவே

நில உரிமையாளரான சிவபுரி மடத்தினை விசாரணை செய்ய நடவடிக்கை எடுத்திருந்துள்ளார்கள். ஆனால் அவர்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எனவே வழக்கில் தீர்ப்புரைக்காக போடப்பட்டுள்ள வாய்தாவினை மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பில் பாட்டா செலுத்தப்பட்டுள்ள சாட்சியத்தினை விசாரணை செய்வதற்காக ரீ ஒப்பன் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/எதிரிவாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் மனு சரியல்ல. சட்டப்படியும், நியாயப்படியும் நிலை நிற்க கூடியது அல்ல. மனுவுக்கு ஆதரவாக மனுதாரர்கள் அபிடவிட்டில் கூறி உள்ள சங்கதிகள் பொய்யானதாகும். அவைகள் வன்மையாக மறுக்கப்படுகிறது. வழக்கில் இரு தரப்பு விசாரணைகள் முடிக்கப்பட்டு மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பு வாதுரைக்காக போடப்பட்டு பல வாய்தாக்கள் எதிர்வாதி தரப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பு விசாரணையை ரீ ஒப்பன் செய்ய வேண்டுமென மனுதாக்கல் செய்திருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. மேலும் யாரை எதற்காக விசாரிக்க வேண்டுமென்றோ, ஏற்கனவே ஏன் விசாரிக்க தவறியுள்ளார் என்றோ எவ்வித காரணமும் கூறப்படாமல் மேற்படி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விசாரணை செய்ய மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியும் இல்லை. வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் மனுதாரர்கள் /எதிர்வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். இம்மனுவில் எந்தவித உண்மைத் தன்மையும் இல்லை. எனவே மனுதாரர்/ எதிர்வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள Re-Open மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு

செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/ எதிர்வாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

5. **தீர்வு:**

(i) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் வாதி மற்றும் எதிர்வாதிகள் தரப்பில் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதுரைக்காக பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதுரைக்காக தயாராக இல்லாத காரணத்தினால், வாதி தரப்பில் மட்டும் வழக்கறிஞர் வாதுரை கேட்கப்பட்டு, அசல் வழக்கானது தீர்ப்புரைக்காக 12.03.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. இந்நிலையில் மனுதாரர்/ எதிர்வாதிகள் தரப்பில் தனது வழக்கை நிரூபிக்க சில முக்கிய ஆதாரங்களைக் கொண்டுள்ளதாகவும், நில உரிமையாளரான சிவபுரி மடத்தினை சாட்சியாக விசாரிக்க மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பு வழக்கை மறுத்திறப்பு செய்ய வேண்டும் என்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) அசல் வழக்கானது 2017-ம் ஆண்டு சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டதில் மனுதாரர்/ எதிர்வாதி தரப்பில் 15.02.2018-ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 31.01.2024 அன்று மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பு சாட்சிக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டிருந்தும், சாட்சி 12.02.2024 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த போதிலும், மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பில் அவரை சாட்சியாக விசாரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பிறகு பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும் வழக்கு விசாரணைக்காக ஒத்திதான் போடப்பட்டதே தவிர மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பில் சாட்சியை விசாரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்காததால், கடந்த

30.08.2024 அன்று மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டது. அதன் பிறகு வாதி தரப்பு வாதுரை கடந்த 12.02.2025 அன்று கேட்கப்பட்டு, மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், தற்பொழுது விசாரிக்காமல் விடப்பட்ட சாட்சியை விசாரிக்க வேண்டும் என்பது வழக்கை வேண்டுமென்றே இழுத்தடிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் இம்மனு மனுதாரர்கள்/ எதிர்வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த சூழ்நிலையில் மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில் இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது, செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 04-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/- M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> | - இல்லை - |

(ஓம்/- M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.5/2025-ல்
அசல் வழக்கு எண்.296/ 2017
நாள்.04.06.2025.